# யாழ்ப்பாண விஸ்வகுல சமூக சிற்பாசாரியார்களின் சிற்பமொழி

சுஜித்தா கார்த்திகேயன்[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

*இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாண சமுதாய மொழிச்சூழலில் பழைமை போற்றும் பண்பும், பண்டைய மொழிக்கூறுகளை வலியுறுத்தும் பாங்கும் வழக்கிலிருப்பது இயல்பானதே. பழைமைக் கூறுகளின் ஸ்திரத்தன்மை தொடர்ந்தும் நிலைத்திருப்பதனை வெளிப்படுத்தும் முகமாக இலங்கைத் தமிழ்ச் சொற்றொகுதி அமையப்பெற்றுள்ளது. இவை யாழ்ப்பாணத் தமிழரின் பாரம்பரிய மரபுரிமையினை நிலைநாட்டுவனவாக விளங்குகின்றன. மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு வழங்கவேண்டிய தலையாய கடமையினை உணர்ந்து, அவற்றுடன் தொடர்புடைய சொற்றொகுதிகளையும் பாதுகாத்து, ஆவணப்படுத்துவதும் அவசியமே. அந்தவகையில் கலாசார மரபுரிமையின் ஓர் அங்கமாக விளங்கும் பிரயோகக்கலையாகிய மரச்சிற்பக்கலை, விஸ்வகுலத்தைச் சார்ந்த மரச் சிற்பாசாரிய சமுதாயத்தினரால் கடந்த பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பின்பற்றப்பட்டும், புதிய பரிமாணங்களையும் உள்வாங்கி, தொடர்ந்தும் வழக்கிலிருப்பதுடன் அடுத்த தலைமுறையினருக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டும் வருவது சிறப்பானதொரு அம்சமாகும். மிக நீண்ட வரலாற்றினையுடைய யாழ்ப்பாண மரச்சிற்பக் கலையுடன் தொடர்புடைய கலைச்சொற்கள், குறிப்பிட்ட பயன்பாட்டெல்லையினைக் கொண்டிருப்பதனை யாழ்ப்பாணச் சிற்பக் கலைஞர்களின் மொழிப்பயன்பாட்டின் மூலம் அறியமுடிந்தது. இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட மொழியியல் ஆய்வுகள் எவையும் மரச்சிற்பக்கலைஞர்களினது சிற்பமொழி பற்றி முழுமையாக ஆய்வு செய்யவில்லை. இதன் விளைவாக இந்த ஆய்வானது யாழ்ப்பாண விஸ்வகுல சமூகத்தினைச் சார்ந்த, குறிப்பாக அராலி ஸ்ரீ விஸ்வேஸ்வரி சிற்பாலய மரச்சிற்பக் கலைஞர்கள், மரபுவழியாகப் பயன்படுத்தி வருகின்ற மரச்சிற்பத் தொழில்சார் கலைச்சொற்களைத் தொகுத்து; அவற்றிற்குரிய விரிவான பொருள் விளக்கத்தினை வழங்குதல்; அக்கலைச்சொற்களின் பயன்பாட்டு எல்லையினை விளக்குதல் ஆகியவற்றினைப் பிரதான நோக்கங்களாகக் கொண்டுள்ளது. நேரடி அவதானிப்பின் மூலமாகவும், நேர்காணல் மூலமாகவும் பெறப்பட்ட கலைச்சொற்கள், கலைச்சொல் அகராதியியல் நெறிமுறைகளுக்கு உட்பட்டு விளக்கமுறை மொழியியல் அடிப்படையில் ஆய்விற்குட்படுத்தப்பட்டன. மரச்சிற்பத் தொழில்சார் கலைச்சொற்கள், விஸ்வகுல சமூகப் பண்பாட்டு அடையாளங்கள், பழக்கவழக்கங்கள், ஆலயங்கள் மற்றும் சமயச்சடங்குகள், கிரியைகளுடனான தொடர்பு போன்றவற்றினை மிக நேர்த்தியாக வெளிப்படுத்தி நிற்றலின் பொருட்டு யாழ்ப்பாணத் தமிழ்த் தொழில்சார் கிளைமொழி வரலாற்றில் முக்கிய இடம் வகிப்பதனை வெளிக்கொணர முடிந்தது. சொற்களின் காப்பகமாக விளங்கும் கலைச்சொல் அகராதிகளின் தொகுப்பினால் மட்டுமே மரபு வழியிலான கலைச்சொற்களின் வழக்கிழந்து செல்லும் தன்மையினைத் தடுத்து நிறுத்த முடியும் என்பது இந்த ஆய்வின் பரிந்துரையாகும்.*

**திறவுச்சொற்கள்:** கலைச்சொற்கள், சமுதாய மொழியியல், சிற்பமொழி, மரச்சிற்பக்கலை, யாழ்ப்பாணச் சமுதாயம்

[1]*மொழியியல் ஆங்கிலத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
sujiththa@univ.jfn.ac.lk

**அறிமுகம்**

சமுதாயக் கூறுகளை முதன்முதலில் மொழியியல் ஆய்விற்கு உட்படுத்திய வில்லியம் லபோவ் (William Labov) அவர்களின் ஆய்வுகளும் அதனைத் தொடர்ந்து வந்த ஏனைய ஆய்வுகளும் சமுதாய மொழியியல் ஆய்வில், சமுதாயக் கிளைமொழியியலின் முக்கியத்துவத்தினையும், அவசியத்தினையும் வலியுறுத்தின. இந்நிலையில் சமுதாயக் கிளைமொழியியல் ஆய்வுகள் பல மொழிக்கும் அது சார்ந்துள்ள சமுதாயத்திற்கும் பயன்படும் வகையில் தோற்றம்பெற்றன. தமிழ் மொழியில் சமுதாயக் கிளைமொழிகள் பலவற்றின் தோற்றுவாய்க்கு சாதியக் கட்டமைப்பு வேறுபாடுகள் மட்டுமன்றி தொழில் வேறுபாடும் தனித்தனிப் பேச்சுவழக்கு உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக அமையப்பெற்றுள்ளன (பூபதி, எஸ்., 1998:149).

தமிழ் மொழியில் தொழில் பேச்சுவழக்குகள் பற்றிய ஆய்வுகளில் சண்முகம்பிள்ளை (1968), சிதம்பரநாதம் பிள்ளை (1972), சீனிவாசவர்மா (1986) ஆகியோரது ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன. தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வழங்கி வரும் தொழில்களான மீன்பிடித்தல், உப்பு உற்பத்தி மற்றும் மட்பாண்டம் தயாரித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோர் பேசும் தமிழ்ப் பேச்சுவழக்குப் பற்றிய மொழியியல் ஆய்வுகளே பெருமளவில் இடம்பெற்றுள்ளன. சித்திரபுத்திரன், திருநாவுக்கரசு, பார்வதியம்மாள் (2002) ஆகியோரது தொகுப்பில் உருவான தொழில் கலைச்சொல் அகராதியில், வேளாண்மை, தச்சு, பட்டு நெசவுத் தொழில்க் கலைச்சொற்கள் தனித்தனியாக அகரவரிசையிற் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

இலங்கையில் அரசகரும மொழிகள் திணைக்களத்தினரால் துறைசார்ந்த கலைச்சொல் அகராதிகள் பல உருவாக்கப்படினும், தமிழ் மொழியின் தொழில் சார்ந்த பேச்சுவழக்கு வேறுபாட்டினை பிரதிபலிக்கும் மொழியியல் ஆய்வுகள் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளன. அவற்றிலும் ஈழக்கலை வரலாற்றில் ஆய்வு செய்யப்படவேண்டிய அம்சங்களில் பிராந்திய ரீதியான கலைப்பங்களிப்புக்கள், அவர்களது மொழிப்பயன்பாடு என்பன இன்னமும் முழுமையாக ஆய்விற்குட்படுத்தப்படாத ஓர் அம்சமாகவே விளங்குகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் மரபுரிமைச் சின்னங்களின் வாழ்க்கைக் காலத்தை அதிகரிக்க அவற்றின் பழைமை மாறாது பாதுகாக்க வேண்டிய அவசியத்தினை யாழ்ப்பாண வரலாற்றாய்வாளர்கள் உணர்ந்து செயற்படுவது போன்று, சமுதாய மொழியியலாளர்களும் யாழ்ப்பாண சமுதாயத்தில் சிறந்து விளங்கும் நுண்கலைகள் பற்றிய சமுதாயமொழியியல் மற்றும் அக்கலைகள் சார்ந்த தொழில் பேச்சுவழக்கு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம் ஆகும்.

இந்துமக்களிடையே இதிகாச புராணங்களுடன் தொடர்புடைய கதைகளும் வரலாறுகளும் காலங்காலமாக இன்றும் போற்றப்பட்டு வருவதற்கு மிகச்சிறந்த அடையாளங்களாக விளங்கும் தேர்களில் செதுக்கப்பட்ட மரச்சிற்பங்களும், விக்கிரகங்களும்

இந்துப் பண்பாட்டியல் மரபில் சிறப்பிடம் பெறுகின்றன. கலாசார முக்கியத்துவம் பெற்ற இலங்கையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிற்பக்கலை வளர ஆரம்பித்தது. கலையிற் சிறந்த சிற்பக்கலையினை வளர்ப்பதற்காக மரச்சிற்பிகள், தமது ஆற்றலும் வேலைப்பாடும் விளங்க எழிலொழுகும் எண்ணற்ற மரச்சிற்பங்கள் படைத்துப் புகழ்பெற்றனர் (சண்முகநாதன், செ., 1980)

பல்வேறு வம்ச மரபுகளின் வளர்ச்சியூடாக யாழ்ப்பாணத்தவரது தனித்துவத்தை எடுத்துக்காட்டும் யாழ்ப்பாணப் பிராந்தியக் கலைமரபாக விளங்கும் தேர்ச்சிற்ப ஆக்கங்கள், சப்பைரதம், மஞ்சம், கைலாச வாகனம், சகடை, ஆலய கோபுரவாயிற்கதவுகள் மற்றும் தெய்வங்களுக்குரிய வாகனங்கள் என்பன மரச்சிற்பக் கலையின் மகத்துவத்தினை தற்கால உலகிற்கு எடுத்துச்சொல்லும் ஊடகங்களாக விளங்குகின்றன. யாழ்ப்பாணத்தில் இக்கலைப் பாரம்பரியத்தின் வளர்ச்சிக்கு காலங்காலமாக பெரும்பங்காற்றிவரும் கலைஞர்களுள் ஆச்சாரியார் கார்த்திகேசு சண்முகம், (சண்டிலிப்பாய் சீரணி ஆலயத்தின் சித்திரத்தேர் உருவாக்கியவர்) ஆச்சாரியார் முருகேசு, ஆச்சாரியார் கார்த்திகேசு சிவசுப்பிரமணியம், ஸ்தபதி திரு. சி. நவரத்தினம், (1980 இல் மயிலிட்டி முனையன் வளவு முருகையன் ஆலயத்தின் தேர் உருவாக்கிய பிரதம ஸ்தபதி) ஸ்தபதி சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமையப்பெற்றுள்ள பரமேஸ்வரன் ஆலயத்தின் மஞ்சத்தினை உருவாக்கியவர்) ஸ்தபதி. ஆறுமுகம், கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை, திரு. ஜீவரத்தினம் (யாழ்ப்பாண சிற்பக்கலை வரலாற்றில் நூற்றுக்கும் மேற்பட்ட தேர்களை வடிவமைத்தவர்), விஸ்வப்பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் (கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், நயினை நாகபூசனி ஆலயம் மற்றும் ஈழத்தில் பிரசித்திபெற்ற ஆலயங்கள் பலவற்றில் சித்திரத்தேர் உருவாக்கிய பிரதம ஸ்தபதி), கலாபூஷணம் சின்னத்தம்பி கணேசலிங்கம், மயிலிட்டி திரு. ச. ஜெயராசா, ஆச்சாரியார் திரு. சு. இராசரத்தினம், ஆச்சாரியார். திரு. கி. கலாமோகன், ஆச்சாரியார். சற்குருநாதன், ஆச்சாரியார் திரு. ஆ. சிவலிங்கம் மற்றும் மயிலிட்டி, திருநெல்வேலி, அராலி, உடுவில், மட்டுவில், மானிப்பாய், நவாலி, உடுப்பிட்டி பிரதேசங்களைச் சார்ந்த சிற்பாசாரியார்களின் தேர்ச்சிற்ப ஆக்கங்கள் மற்றும் இதர மரச்சிற்ப படைப்புக்கள் யாழ் சிற்பக்கலை வரலாற்றில் ஆவணப்படுத்தப்பட வேண்டியவை.

இந்து சிற்ப இலக்கணத்தைப் பொறுத்தளவில் தமிழக சிற்பக்கலைஞர்களுக்கு இணையாக ஈழத்தில் ஊற்றெடுத்த மரச்சிற்பக் கலைமாமணிகள் பலரைத் தன்னகப்படுத்திய யாழ் மண்ணில் அதன் உச்ச எல்லையைத் தொட்டுநின்ற கலைஞர்களில் முதன்மையானவர்களாக ஸ்தபதி முருகேசு, ஆசாரியார் ஆறுமுகம், ஆச்சாரியார் கந்தசாமி, கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை மற்றும் அவரது இளவல் ஜீவரத்தினம், விஸ்வப்பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் போன்றோரைக் குறிப்பிடலாம். 1970 தொடக்கம் 2000 ஆண்டு காலப் பகுதிவரை ஈழத்துத் தேர்க்கலையுலகில் ஆகம மரபு அங்கீகாரம் பெற்ற ஸ்தபதியாக

விளங்கியவராக கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள் (அம்பிகைபாகன், வே., 2000:5) குறிப்பிடப்படுகின்றார். அவரது காலப்பகுதியில் உருவானவரே யாழ்ப்பாணத்தில் தேர்ச் சிற்பக்கலையில் புதிய திருப்புமுனையினை ஏற்படுத்திய புகழ்பெற்ற திருத்தலங்கள் பலவற்றில் தேர் எழுப்பிய அமரர். ஸ்தபதி. சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்கள். ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் இறைவன் வீதியுலாவருவதற்கு பயன்படுத்தப்படும் வாகன உருவாக்கங்களிலும், மஞ்சம், சப்பைதரம், தேர் உருவாக்கங்களிலும், நாதஸ்வரம் கடைவதிலும் மிகச் சிறந்த சிற்பக் கலைஞராகப் பலராலும் போற்றப்பட்டார், அவரது படைப்புக்களால் இன்றும் போற்றப்படுகின்றார். ஆரம்பத்தில் இந்தியாவில் நரசிங்கம்பேட்டை எனும் இடத்தில் மட்டுமே நாதஸ்வரம் கடைசல் பணி நடைபெற்ற நிலையில் அப்பணியை இலங்கையில் மூடியபொருளாதாரம் நிலவியபோதும் கூட இயந்திர வசதிகள் மிகக் குறைவான காலப்பகுதியிலும் நாதஸ்வரம் கடைதற் பணியினை மேற்கொண்டிருப்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. மேலும் நாதஸ்வர உழவுப் பகுதியின் உருவாக்கத்திற்கு வேண்டிய ஆச்சா மரம் (சடவக்கை) இந்தியாவில் மட்டுமே உள்ளது என்ற கருத்தை முறியடித்து இலங்கையில் காட்டுப்பகுதிகளில் மரவகைகளை ஆராய்ந்து பல ஆச்சா மரங்கள் இருப்பதை உறுதி செய்ததுடன் நாதஸ்வர உருவாக்கப் பணிக்கு அதனைப் பயன்படுத்தியிருந்தார். இன்று அன்னாரின் இளைய சகோதரர் சின்னத்தம்பி கணேசலிங்கம், மற்றும் அவரது புதல்வர்கள் தொடர்ந்தும் சிற்பத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களே சிற்பத்திற்கு பெயர் பெற்ற அராலியூர் ஸ்ரீ விஸ்வேஸ்வரி சிற்பாலய மரச்சிற்பக் கலைஞர்கள், இவர்கள் தேர்கள் உருவாக்கத்திலும், ஆலயங்களுக்கான வாகனங்கள் உருவாக்குவதிலும் சிறந்து விளங்குகின்றனர்.

கலாபூஷணம் சின்னத்தம்பி கணேசலிங்கம் அவர்களது படைப்புக்கள் ஈழத்தில் மட்டுமல்ல இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, கொலண்ட் போன்ற நாடுகளின் ஆலயங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. பரம்பரை பரம்பரையாக இத்தொழிலில் ஈடுபட்டு வருவதற்கு சான்றாக இவரது தந்தை சின்னத்தம்பி, பேரன் கணபதிப்பிள்ளை, பூட்டனார் முருகேசு ஆகியோரது படைப்புக்கள் ஈழத்தில் சான்றுபகர்கின்றன. எடுத்துக்காட்டாக: ஆச்சாரியார் சின்னத்தம்பி கணேசலிங்கம் அவர்களது மூன்றாவது தலைமுறையினைச் சார்ந்த ஆச்சாரியார் முருகேசு அவர்களது 140 ஆண்டுகளுக்கு முற்பட்ட தேர் திருகோணமலை முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் இன்றும் பயன்பாட்டில் இருப்பதனைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக யாழ்ப்பாணத் தமிழரின் தனித்துவத்திற்கு ஓர் உரைகல்லாக விளங்கும் மரச்சிற்பத் தொழிலுடன் தொடர்புடைய சிற்பாலயங்கள் பல யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் இன்றும் நேர்த்தியாக இயங்கி வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இருப்பினும் மரச்சிற்பத் தொழிலுடன் தொடர்புடைய பேச்சுவழக்கு பற்றிய மொழியியல் ஆய்வுகள் எவையும் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை என்றே கூறலாம். வேலுப்பிள்ளை

அம்பிகைபாகன் அவர்கள், தம்பித்துரை அவர்களின் படைப்புக்களை முழுமையாக ஆராய்ந்து தோச்சிற்பத்திறனாய்வு பற்றிய தனது கருத்துக்களை கலாவிமர்சகராக முன்வைத்துள்ள நிலையில் யாழ்ப்பாண வழக்குச் சிற்பக்கலைச்சொற்கள் சில இவரது மொழிநடையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மொழிகளின் மூலாதாரமாக விளங்கும் சொற்கள் கருத்துப்பரிமாற்றத்திற்கு மட்டுமன்றி அம்மொழிகளைப் பேசும் சமுதாய வளர்ச்சிக்கும், வளர்ந்துவரும் மொழிகளின் வளத்தினையும் சிறப்பினையும் வெளிக்காட்டுவதிலும் பெரும்பங்காற்றுகின்றன (சுந்தரமூர்த்தி, இ., 2002:iii) தமிழ்மொழி காலந்தோறும் வளர்ச்சியடைந்து வருவதுடன் மாற்றத்திற்குள்ளாகி வருதலையும் வரலாற்று மொழியியல் ஆய்வாளர்களது கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன. மேலும் "பழையன கழிதலும் புதியன புகுதலும்" எனும் கருத்திற்கேற்ப மொழிகளில் நாள்தோறும் பல்துறை சார் சொற்கள் பெருகிவரும் நிலையில் பழைய சொற்கள் பல வழக்கிழந்து வரும் நிலையினையும் அதானிக்கமுடிகின்றது. ஒரு மொழியின் உலகந்தழுவிய தன்மையையும் அவற்றின் பயன்பாட்டையும் வரையறுத்துக்காட்ட சொற்கள் அனைத்தும் ஆவணப்படுத்தல் வேண்டும் எனும் மையப்பொருளில் அமையப்பெற்ற யாழ்ப்பாண விஸ்வகுல சமூக சிற்பாசாரியார்களின் சிற்பமொழி பற்றிய இவ் ஆய்வானது, மரபுவழியாகப் பேணப்பட்டு வரும் மரச்சிற்பத் தொழிற் கலைச்சொற்களை அடிப்படையாகக் கொண்டு சமுதாய-பண்பாட்டு மொழியியல் அம்சங்களையும் கருத்திற்கொண்டு விளக்கமுறை மொழியியல் அடிப்படையில் ஆராய்வாக அமையப்பெற்றுள்ளது.

### ஆய்வின் நோக்கம்

மொழி காலந்தோறும் மாற்றம் அடைவதுடன் சொற்களஞ்சிய நிலையில் வளர்ச்சி பெற்று வருகின்றமை யாவரும் அறிந்ததே. இன்றைய அறிவியல் உலகு முற்றிலும் இயந்திர மயமாக்கல் எனும் தொனிப்பொருளுடன் உலாவரும் நிலையில் இன்னும் ஐம்பது ஆண்டுகளில் மரபுவழித் தொழில்கள் முற்றிலும் இயந்திரமயமாக்கப்படும் நிலை ஏற்படும் என்பது ஆய்வாளர்களின் கணிப்பாகும் (சித்திரபுத்திரன், எச்., 2002:ix).

அந்தவகையில் நீண்டகாலமாக விஸ்வகர்மர்களின் நாளாந்தப் பேச்சுவழக்கில் ஒன்றிணைத்துப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற மரச்சிற்பத் தொழில்சார் கலைச்சொற்கள் தமிழ் மொழியின் செழுமையை உலகிற்கு வெளிப்படுத்துவனவாக விளங்குவதுடன் அவை இந்துப் பண்பாட்டியலுடனும் பெரிதும் தொடர்புறுகின்றன. காலவளர்ச்சியில் அறிவியற் கலைச்சொற்களின் ஊற்றெடுப்பின் விளைவாக இத்தகைய கலைசார் மரபுச்சொற்கள் அழிந்துவிடும் அபாயம் ஏற்பட்ட வண்ணம் உள்ளது. எனவே தமிழ்ச் சொற்றொகுதியில் அவற்றிற்குரிய இடம் வழங்கப்பட வேண்டும், அவை பாதுகாக்கப்பட வேண்டும் எனும் முதன்மை நோக்கில் இவ் ஆய்வானது, யாழ்ப்பாண விஸ்வகுல சமூகத்தினைச் சார்ந்த,

குறிப்பாக அராலி ஸ்ரீ விஸ்வேஸ்வரி சிற்பாலய மரச் சிற்பக்கலைஞர்கள், மரபுவழியாகப் பயன்படுத்தி வருகின்ற மரச்சிற்பத் தொழில்சார் கலைச்சொற்களைத் தொகுத்து; அவற்றிற்குரிய விரிவான பொருள் விளக்கத்தினை வழங்குதல்; அக்கலைச்சொற்களின் பயன்பாட்டெல்லையினை விளக்குதல் ஆகியவற்றினைப் பிரதான நோக்கங்களாகக் கொண்டு அமையப்பெற்றுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

இலங்கையில் ரதங்கள், ஆலய வாகனங்கள், சப்பைரதங்கள், மஞ்சம், சகடை, கைலாசவாகனம், விக்கிரகங்கள் போன்றவற்றின் உருவாக்கப் பணியில் ஈடுபடும் யாழ்ப்பாண விஸ்வகுல சமூக சிற்பாசாரியார்களின் சிற்பமொழி தொடர்பாக முழுமையான ஆய்வுகள் இடம்பெறாத நிலையில் கலைச்சொல் அகராதியியல் நெறிமுறைகளுக்கு உட்பட்டு மொழியியல் அடிப்படையில் ஆராயப்பெறும் இவ் ஆய்வானது ஒரு புதிய மற்றும் பெருமுயற்சி ஒன்றின் தொடக்கப்புள்ளியாக அமையப்பெறுகின்றது.

சித்திரபுத்திரன்,எச்., திருநாவுக்கரசு,இரா., பார்வதியம்மாள்,மா. ஆகியோரது தொகுப்பில் உருவான “தொழில் கலைச்சொல் அகராதி” (உழவு, தச்சு, கொல்லு, பட்டு நெசவுத் தொழில்கள்) (2002) எனும் ஆக்கத்தில் இந்திய நாட்டின் கும்பகோணம், பாபநாசம், திருக்காடுப்பள்ளி போன்ற பகுதிகளில் மேற்கொண்ட களப்பணி மூலம் பெறப்பட்ட கலைச்சொற்கள் அகரவரிசைப்படுத்தி, அவற்றுக்கான பொருள்விளக்கம் தரப்பட்ட நிலையில் அவை பெரும்பாலும் வீட்டுத்தளபாட உருவாக்க வேலைகளுடன் தொடர்புற்றிருப்பதனை அவதானிக்க முடிந்தது. நூலில் இடம்பெற்ற பின்வரும் உரைப்பகுதி இதற்குச் சான்றாக அமைகின்றது: “மரத்தை மூலப்பொருளாகக் கொண்டு நடைபெற்று வரும் இத்தொழில் மூலம் பலவகையான மரச்சாமான்கள் குறிப்பாக வீட்டு உபயோகப் பொருட்கள், இருக்கைகள், படுக்கைகள், உழவுக் கருவிகள், வண்டி, போக்குவரத்துச் சாதனங்கள், விளையாட்டுப்பொருட்கள், கருவிகள் போன்றவை செய்யப்படுகின்றன”. மாறாக சித்திரத்தேர் உருவாக்கம், மஞ்சம், சப்பைரதம், ஆலய வாகனங்களின் உருவாக்கம் சார்ந்த கலைச்சொற்கள் மிகக்குறைவாக இருப்பதுடன் சில கலைச்சொற்கள் இலங்கைத் தமிழ், இந்தியத் தமிழ்ப் பிரதேசக் கிளைமொழி வேறுபாட்டினையும் புலப்படுத்தி நிற்கின்றன.

சீனிவாசவர்மா,கோ. அவர்களது “கிளைமொழியியல்”, புஷ்பரட்ணம்,ப. அவர்களது “யாழ்ப்பாண வாழ்வியல்” (2012) எவையும் முறையே சிற்பத் தொழில் கிளைமொழி பற்றியோ அல்லது யாழ்ப்பாணத்து விஸ்வகர்மர்கள் பற்றியோ விளக்கியிருக்கவில்லை.

கிளைமொழியியல், சமுதாய மொழியியல், களமொழியியல் என்பவற்றில் ஆழ்ந்த ஆய்வு அனுபவம் மிக்க பூபதி, எஸ். அவர்களது தமிழ்நாட்டின் மொழிச்சூழல் எனும் நூலில் ஆட்சியாளர்கள், திட்டவல்லுநர்கள் மற்றும் கல்வியியலாளர்களுக்குப் பொது நிலையிலும் மொழியியலாளர்களுக்குச் சிறப்பு நிலையிலும் பயன்படும் வகையிலான தமிழ் மொழியின் வட்டாரக் கிளைமொழிகள், சமுதாயக் கிளைமொழிகள், தொழில் பேச்சுவழக்குகள் போன்ற கிளைமொழிகளைப் பற்றிய மொழியியல் கூறுகள் ஆராயப்பட்டுள்ளன. தொழில் பேச்சுவழக்குகள் எனும் பிரிவில் கோ. சினிவாசவர்மா அவர்களது கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட மீனவர் பேச்சுத்தமிழ், உப்பளத் தொழில் பேச்சுமொழி, குயவர் பேச்சுமொழி பற்றியே கிளைமொழியியல் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

தேர்ச்சிற்பக்கலையுடன் தொடர்புடைய சிற்பமொழி பற்றிய சமுதாய மொழியியல் ஆய்வுகள் மிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. அம்பிகைபாகன். வே (2000) அவர்கள், “கலாகேசரி ஆ. தம்பித்துரை” எனும் தலைப்பில், தேர்ச்சிற்பத்திறனாய்வு பற்றிய தனது கருத்துக்களை தம்பித்துரை அவர்களின் படைப்புக்களை முழுமையாக ஆராய்ந்து வெளிப்படுத்திய நிலையில் தேர்அமைப்பு முறைகள், அதன் குறிப்பிட்ட பாகங்களின் பெயர்கள் என்பன பற்றியும் குறிப்பிட்டிருந்தமையினை அவதானிக்க முடிந்தது. இதற்குச் சான்றாக பின்வரும் பகுதிகளைக் குறிப்பிட முடியும்: “யாழ் பாணியில் தன்னை இனங்காட்டும் வளர்ச்சிப் போக்கில், எண்கோண வடிவமுடைய நான்கு சில்லுகளைக் கொண்ட வண்ணைக் காமாட்சி அம்மன் தேரில் (1971) சதுர வடிவமைப்பிலிருந்த சித்தூர் மட்டமும் எண்கோண வடிவமெடுப்பது புதுமைமிகு அம்சமாகும்”, (பக்:6) “1974 இல் சிற்பத்தேர் எனச் சுட்டத்தகும் முதல் தேராகிய சுதுமலை புவனேஸ்வரி அம்மன் தேரில் சித்தூர் மட்டம், பேரூர் மட்டம் என்னும் முதலாம், இரண்டாம் தளங்களில் முறையே 30, 32 ஆக மொத்தம் 62 சிற்பங்கள் உபபீட கீழ்த்தளமாகிய கபோதகத்துச் சிறுகோட்டங்களில் துவாரபாலகியர் இடம் பெறுகின்றனர்”. (பக்:8) மேலும் தேர் அமைப்பு முறைகளான நாகரம் - சதுர வடிவமான தேர், திராவிடம் - எண்கோண வடிவமான தேர், வேஸரம் அல்லது வாராடம் - வட்டவடிவமான தேர் என்பன பற்றியும் தேரின் அடிப்பாகத்தில் அமையப் பெற்றிருக்கும் சிற்பங்கள் பூலோக வாழ்க்கை, ஆகாய வாழ்க்கை, சுவர்க்க வாழ்க்கை ஆகிவற்றைச் சித்தரித்து நிற்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர். சுபதினி ரமேஸ் அவர்கள் “ஈழத்துத் தமிழ்ச் சிறப்புச் சொற்கள்” எனும் நூலில் ஈழத்தில் பயன்பாட்டிலுள்ள சொற்களைத் திரட்டித் தொகுப்பாகத் தந்துள்ளார். அச்சொற்றொகுதியில் ஆவுகார்-மரங்களில் துளையிடுங் கருவி, அச்சுக்குடம்-மாட்டு வண்டியின் சில்லின் மையத்தில் இருக்கும் மரத்தாலான பகுதி, கொண்டைச்சுத்தியல்-தட்டார் கருவிகளில் ஒன்று, கொடுங்கை- கொடுமை, கோது-தல்-தோண்டுதல், சடை-ஆணியின் கொண்டை,

செய்கைத்தேர், சோற்றி-மரத்தின் உள்வெளிறு போன்ற சிற்பத்தொழிலுடன் தொடர்புடைய சொற்கள் சில குறிப்பிடப்பட்டிருப்பினும் அவற்றுக்கான பொருள் விளக்கம் தேர்ச்சிற்பக்கலை மற்றும் மரச்சிற்பக்கலையுடன் தொடர்புபடுத்தப்படவில்லை மேலும் அவை சார்ந்த முழுமையான சொற்பட்டியல் உள்ளடக்கப்படாத நிலையில் யாழ்ப்பாணத்தில் மரச்சிற்பத் தொழிலில் ஸ்தபதிகளினால் பயன்படுத்தப்படும் சொற்களின் தொகுப்பு மேற்குறிப்பிட்ட ஆய்வுகளில் இருந்து வேறுபட்டதாகவும், தொழில்நுட்ப விருத்தியினால் வழக்கொழியும் நிலையில் உள்ள சிற்பமொழியின் ஆவணப்படுத்தலாகவும் அமையும் என எண்ணுகின்றேன்.

**ஆய்வு முறையியல்**

முதன்மைத் தரவுகளாக விளங்குவன, 1973 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாண தேர்ச் சிற்பங்கள், விக்கிரகங்கள், நாதஸ்வரம் கடைதல் மற்றும் ஆலய வாகனங்களின் உருவாக்கப் பணியில் ஈடுபட்டு வந்த அராலி ஸ்ரீ விஸ்வேஸ்வரி சிற்பாலயக் கலைஞர்களான கலாபூஷணம், விஸ்வப்பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி கணேசலிங்கம் ஆச்சாரியார் மற்றும் மறைந்த ஆச்சாரியார் அராலியூர் ஸ்தபதி சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்களது புதல்வர்களிடமிருந்தும் நேரடி அவதானிப்பின் மூலமாகவும் நேர்காணல் மூலமாகவும் பெறப்பட்ட கலைச்சொற்கள் கலைச்சொல் அகராதியியல் நெறிமுறைகளுக்கு உட்பட்டு விளக்கமுறை மொழியியல் அடிப்படையில் ஆய்விற்குட்படுத்தப்பட்டன.

மேலும், தொழில் கலைச்சொல் அகராதி, கிளைமொழியியல், யாழ்ப்பாண மரச்சிற்பக்கலை தொடர்பாக வெளிவந்த நூல்கள், காணொளிகள், அகராதிகள், ஆய்வேடுகள் என்பன இவ் ஆய்விற்குரிய துணைநிலைத் தரவுகளாக அமையப்பெற்றுள்ளன.

**தரவுப் பகுப்பாய்வு**

பொதுவாக, சொற்றொகுதி பற்றிய ஆய்வானது சொல்நிலையில் மட்டும் மட்டுப்படுத்தப்படுதல் வினைத்திறனற்ற செயற்பாடாகும். சொற்கள் ஒரு குறிப்பிட்ட மொழிச் சமுதாயத்தின் சமூகப் பண்பாட்டு அடையாளங்கள், இச் சொற்றொகுதிகள் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம், சடங்குகள் உள்ளிட்ட வழிபாட்டு மரபுகள், சொல்லாக்க வரலாறுகள், சொல், சொற்பொருள் ஆகியவற்றின் தோற்றம், வழக்கிழப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தும் சான்றுகள். (மாதையன், பெ., 2019:11) எனவே சொற்தொகுதி பற்றிய ஆய்வு குறிப்பிட்ட மொழிச் சமுதாயத்தின் மொழிப் பழமையினை வெளிப்படுத்தும் வகையில் அவற்றின் பயன்பாட்டு எல்லைகளுடன் விளக்கப்படுதல் அவசியம் என்பதைக் கருத்திற் கொண்டதாக இப்பகுதி அமையப் பெறுகின்றது.

ஆலயத்தேர்கள் மற்றும் இதர படைப்புக்களின் உருவாக்கத்தில் மரங்களைத் தெரிவு செய்வதிலிருந்து அவற்றை அறுத்துச் சீர்செய்து தேவையான படைப்புக்களாக உருவாக்கும் வரை பல படிநிலைகள் உள்ளன. மேலும் சிற்பத் தொழிலுக்கெனத் தனித்தனிக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய கருவிகள் அதன் பயன்பாட்டின் அடிப்படையில் பலவகைப்படுவதாக தொழில் கலைச்சொல் அகராதியில் (2002) குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்திலும், ஈழத்திலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இக் கருவிகளைக் குறிப்பிடும் பெயர்களில் வேறுபாடு இருப்பதனை அவதானிக்க முடிகிறது.

மேலும் தகவலாளர்களாகிய அராலி ஸ்ரீ விஸ்வேஸ்வரி சிற்பாலயக் கலைஞர்களிடமிருந்து பெற்ற தரவுகளின் அடிப்படையில் மரச்சிற்ப வேலைகளில் பயன்படுத்தப்படும் கருவிகளின் பெயர்கள், மாதிரி உலகத்தினைக் கலைஎழில் கொஞ்ச சித்தரித்துக் காட்டுவதான தேர்ப் பாகங்களின் வழக்கிலுள்ள பெயர்கள், அத்துடன் ஆலயங்களில் திருவிழாக்காலங்களில் இறைவன் வீதியுலா வருவதற்கு உபயோகிக்கும் வாகனங்களின் உருவாக்கப் பணியின் போது பயன்படுத்தப்படும் சொற்கள், சிற்பாசாரியார்கள் பின்பற்றும் கிரியை நெறி சார்ந்த கலைச்சொற்கள் என்பன பயன்பாட்டுப் பொருளுடன் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன.

அச்சு - தேரின் நான்கு சக்கரங்களையும் பொருத்துவதற்காகவும், தேரின் பகுதிகளைத் தாங்குவதற்காகவும் மரத்தினால் அமைக்கப்படும் பகுதி.

அச்சுப்பார் - அச்சுப் பகுதிக்கு மேல் தேரின் வரிகளை அமைப்பதற்காகப் பயன்படுத்தப்படுவது. இரண்டு மர அச்சுக்களையும் இணைக்க உதவும்.

அச்சுப் பூதத்தலைப்பார் - வரிகளை அமைப்பதற்கு மேல் ஆதாரமாக உள்ள பார். இதன் இரு அந்தங்களிலும் பூதம் அமைக்கப்பட்டிருக்கும்.

அச்சுரு ஆணி - தேரின் அடிப்பகுதிகள் அனைத்தையும் இணைக்கும் வகையில் இரும்பு அச்சு, மரஅச்சு ஊடாக தேவாசனம் வரை உள்ள நீளமான ஆணி.

அட்டவர்க்கம் - தேர் வரைப்பு முறைகளில் ஒன்று. அட்டதிக்குப் பாலகர்கள் தேரின் அடித்தளத்தில் அமையுமாறு சிற்பங்கள் உருவாக்கப்படும்.

அணசு - நாதஸ்வரத்தின் கீழ்ப்பகுதி (ஒலியை அதிகரிக்க உதவுவது). இந்தியத் தமிழில் இதற்கான பொருள் இழைப்புளியின் கூர்ப்பு மேலே தூக்காமலிருப்பதற்காக கூர்ப்போடு பொருத்தப்படும் கருவி என்பதாகும்.

அணைபலகை(யாழ் வழக்கு)

அணசுப் பலகை (இந்திய வழக்கு) - கதவுகளின் பின்புறம் பாதுகாப்பிற்காகவும், வலிமைக்காகவும் இணைக்கப்படும் பலகை..

அருகு - மரத்தின் கூர்மையான பாகங்கள் மனிதருக்குத தீங்கு ஏற்படாவண்ணம் கூர் மழுங்கச் செய்தல்.

அலகு - துளையிடப் பயன்படும் கூரான கருவி மற்றும் சீவுளிக் கூட்டில் பயன்படுத்தப்படும் உளி.

அவுண் (யாழ் வழக்கு)

அம்மூண் (இந்திய வழக்கு) - உளியின் தலைப்பாகம் சிதைந்து போகாமல் இருக்கப் பயன்படுத்தப்படும் இரும்பாலான வளையம்.

ஆச்சா மரம் - நாதஸ்வர உருவாக்கத்திற்குப் பயன்படும் மரவகை.

ஆமாா் - (ஆங்கில மொழிக் கடன் சொல்) இரும்பினால் ஆன ஒரு வகை சுத்தியல்.

ஆப்புக்கட்டை - மரத்தை இரண்டாகத் துண்டாக்குவதற்குப் பயன்படுத்தப்படுவது.

ஆவுகாா் - மனித வலுவினால் துளையிடப் பயன்படுத்தப்படும் கருவி.

இசறு - குதிரை வாகனத்தில் குதிரையின் தலையில் இணைக்கப்படும் ஒரு அலங்கார வடிவம்.

இஞ்சி - அளவீட்டுப் பெயா்

இரட்டைப் பஞ்சாங்க அணியமைப்பு - தேரின் பெறுமதியினை அதிகரிக்க செய்யப்படும் விலைமதிப்பான அலங்கார வேலை.

உருப்படி - முற்றுப் பெற்ற படைப்பு.

உருத்திராகாரம் - தோ் அமைப்பு முறைகளில் ஒன்று. சிவன், அம்மன் முதலிய தெய்வங்களுக்கு இம்முமுறையில் தோ் அமைக்கப்படும்.

உருத்திர பாகம் - சிவனின் திருவிளையாடற் சிற்பங்கள் அமையப்பெறும் பகுதி.

உழவு - நாதஸ்வரத்தின் மேற்பகுதி.

உழுத்தல் - ஒரு வகை பூச்சியின் தாக்கத்தினால் முதிர்ச்சியடையாத மரம் மா போன்று போன்ற தூள் தூளாக அரித்தல்.

உளி - சிற்பங்களைச் சித்தரிப்பதற்கும், கொத்து வேலைகளிற்கும் பயன்படும் மூல உபகரணம்.

ஊக்கு - இரும்பாலான கேள்விக்குறி போன்ற வளைந்த உபகரணம்.

எண்ணெய்க்கல் - உளி தீட்டும் கல்.

எழுதகம் - தேரில் வரி வா்க்கங்கள் அமைக்கும் அலங்கார முறைகளில் ஒன்று.

**க்**

கபோதகம் - தேரின் வரிவர்க்கங்கள் அமைக்கும் அலங்கார வகை. எழுதகத்தின் தலைகீழான தோற்றப்பாடாக அமையப்பெறும்.

கம்பை - றீப்பை - ஒரு வகை மரக்கீலம்.

கமலாகாரம் - தேர் அமைப்பு முறைகளில் ஒன்று. பிள்ளையார், முருகன் முதலிய தெய்வங்களுக்கு இம்முறையில் தேர் அமைக்கப்படும்.

கட்டைப்பார் - சில்லுப் பக்கத்திற்கு வரும் பார் நெடும் பாரில் இருந்து வெளியேறுவது போல் அமைக்கப்படும்.

கட்டமட்டக் கூடு - மரத்தைச் சீவுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நீளம் குறைந்த சீவுளிக் கூடு.

கட்டுத்தேர் - தேரின் அடிப்பாகம் மரத்தினாலும், தேர்க்கூரை தென்னங்கீற்றுக்களால் வேய்ந்து அதன்மேல் பலவர்ண தேர்ச்சீலைகளால் அலங்கரிக்கப்பட்ட தேர்

கடைச்சல்கட்டை- மரத்தினை தேவையான அளவிற்கு ஏற்ப மனித விசை அல்லது இயந்திர விசை மூலம் சுழலச் செய்து உளியின் மூலம் உருவாக்கப்படும் அழகிய மரக்கடைச்சல்.

கடையாப்பு (கடையாணி ஆப்பு) - வாகனங்களின் பாகங்களை படிச்சட்டத்துடன் இணைப்பதற்கு அல்லது இரண்டு மர அமைப்புக்களை ஒன்றுடன் ஒன்று இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு வகைத் தொழில்நுட்பம்.

கடையாப்புப் பொழி - கடையாப்பினை இறுக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு வகைப் பொழி.

கண் திறத்தல் - ஸ்தபதி குளித்துப் புத்தாடை உடுத்தி, நெற்றிக்கு திருநீறு இட்டு, விரல்களிலே மோதிரம் அணிந்து, இடது தோலிலே மேலாடை தரித்து முதலில் விநாயகர் பூசையினைச் செய்வர், பின்னர் ஸ்தபதி விராட் விஸ்வப்பிரம்மனை நினைத்து வணங்கி அவர் அனுமதி பெற்றுக்கொண்டு கண் திறப்பதற்குக் சிற்பத்தின் அருகில் சென்று உளியால் வலது கண்ணை முதலில் திறத்தல் வேண்டும் பின் இடது கண்ணைத் திறத்தல் வேண்டும். பின் உளியால் ஒளிமண்டலம், விழி மண்டலம் ஆகிய இரண்டையும் செம்மையாகத் தெளிவுறச் செய்தல் வேண்டும். இரண்டு கண்கள் மட்டுமே படிமத்திற்கு இருப்பின் அவ்விரண்டு கண்களையே படிமத்திற்குத் திறத்தல் வேண்டும். பல முகங்கள் ஒரு படைப்பில் இருப்பின் அவை யாவற்றையும் திறந்திடல் வேண்டும். மரச்சிற்பங்களுக்கு கண்திறக்கும் போது ஸ்தபதியைத் தவிர வேறு யாரும் அப் படைப்புகளைப் பார்த்தல் கூடாது. எனவே படிமத்திற்கு நாற்புறமும் திரையிட்டே இப்பணியைச் செய்வர். தூப தீபம் காட்டி பாலும் பழமும் தேனும் படைக்க வேண்டும்.

கர்ணகுடம் (இந்தியா) கர்ணகூடு (யாழ் வழக்கு) - சிறிய சிறிய ஆலய வடிவங்களைப் போன்று தேர் அல்லது மஞ்சம், சப்பைதரம் போன்றவற்றில் அமைக்கப்படுவது.

கருக்குக் கட்டுதல் (யாழ்)

கம்பி கட்டுதல் (இந்தியா) - கீற்றுளியால் கோடு போன்று அலங்கார வேலைகள் செய்தல்.

கலசம் - தேரின் உச்சியில் அமையப் பெறும் முடி.

கழுந்து - இரண்டு மரப்பாகங்களை ஒன்றுடன் ஒன்று இணைக்கும்போது இணைக்கப்படவுள்ள பகுதியை கூராக உருவாக்குவது.

கீற்றுளி (யாழ்)
இழைப்புளி (இந்தியா) - சிற்பங்களைச் சித்திரிக்கப் பயன்படுத்தப்படுவது.

கனத்த உளி - பொழி அடிக்கப் பயன்படுத்தப்படுவது. சற்று பாரமான திடமான உளி.

குதிரைக்கட்டை - தேரின் அடிப்பாகத்தில் பொருத்தப்படும் சிறிய அலங்கார குதிரைச் சிற்பங்கள்.

குடற் பகுதி - படைப்புக்குத் தேவையான மரத்தில் பாவனைக்கு உட்படுத்த முடியாத நடுப்பகுதி.

கூடு$_1$ - இரண்டு மரப்பாகங்களை ஒன்றுடன் ஒன்று இணைக்க பயன்படுத்தப்படும் பள்ளமான பகுதி.

கூடு$_2$ (தேரில்) - தேரின் மேற்பகுதி. அதாவது பவளக்காலுக்கு மேலுள்ள அலங்கார பந்தல் வேலை.

கெந்துருவம் - இரதோற்சவத்தின் போது தேர் நிலைக்கு மாலையினை எடுத்து வரும் இறக்கையுள்ள மனித உருவம்.

கொத்து வேலை - தேரின் பெரும்பாலான பாகங்களினை மேலும் அழகுபடுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் கீற்று வேலை.

கொடுங்கை - தேரின் மேற்பகுதியில் அலங்கார பந்தலில் இணைக்கப்படும் ஓடு போன்று அமைக்கப்படும் அலங்கார வடிவங்கள்.

கொடுங்கை வரி ரேந்தை - மூன்று தளங்களாக கொடுங்கைகள் பூட்டப்படும் நிலையில் உருவாகும் இடைவெளிகளை நிரப்பி அழகுபடுத்துவதற்கு பூட்டப்படும் அலங்கார வேலைப்பாடு.

கொண்டைத் தலையாணி - இரண்டு மர ஆக்கங்களை ஒன்றிலிருந்து ஒன்று பிரியாத வண்ணம் இறுக இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம்.

கோதுதல் - வாகனங்களின் உடம்புப் பகுதியின் எடையைக் குறைப்பதற்காக தேவையற்ற உட்பகுதிகளை நீக்குதல்.

## ச்

சத்தார் - சரிவு

சறுக்குக்கட்டை - இரதோற்சவத்தில் தேரினை இழுத்து வரும் போது ஆலய வீதிக்கு ஏற்ப தேரின் திசையினை மாற்றுவதற்கும், குறிப்பிட்ட இடங்களில் தேரினை நிறுத்துவதற்கும் தேர்ச்சில்லுக்கு அடியில் இடப்படும் மரக்கட்டை.

சாணக்கல் - உளி முதலிய கருவிகளை கூராக்குவதற்குப் பயன்படுத்தப்படும் கல்.

சித்திரத்தேர் - தேரின் அடித்தளத்திலிருந்து விமானப் பகுதி வரை முற்றிலும் மர வேலைப்படுகளுடன் அமைக்கடும் தேர்.

சிம்மாசனம் - தேரில் இறைவன் வீற்றிருக்கும் ஆசனம்.

சில்லு - தேரின் நான்கு சக்கரங்கள்.

சிற்றுளி - கதவுப் பொழி அடிக்கப் பயன்படுத்தப்படுவது.

சீவாளி/நறுக்கு - நாதஸ்வரத்தில் மேற்பகுதியில் அமையப் பெற்ற ஒரு வகைப் புல்லாலான பகுதி.

சீவுளி - (சீவு+உளி) மரத்தைச் சீவுவதற்குப் பயன்படுத்தும் உளி வகை.

சுத்து - மரத்தின் சுற்றளவு.

சுவர்ப்பலகை - தேரின் பண்டிகைப் பகுதியில் அலங்கார சிற்பங்களை இணைப்பதற்குப் பூட்டப்படும் பலகை.

செடி, கொடி வேலை (யாழ் வழக்கு)

அடுக்குச் சித்திரம் (இந்திய வழக்கு) - சிற்பம் தவிர்ந்த பூ வடிவ அலங்கார வேலைப்பாடுகள்.

சேணம் - குதிரை வாகனத்தில் குதிரையின் முதுகில் பூட்டப்படும் அலங்கார வேலைப்பாடு.

சோழிமூலைமட்டம் - மரங்களை இணைக்கும் பொழுது 90 பாகை தவிர்ந்த ஏனைய விரிகோணம் அல்லது கூர்ங்கோண அமைப்புக்கு ஏற்ப வடிவத்தினை வரைப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு வகை மூலமட்டம்.

## த்

தட்டுப்பொல் - மரத்தினாலான ஒரு வகை சுத்தியல். உளிகளை செயற்படுத்தப் பயன்படுத்தப்படுவது.

தட்டு - மரத்தின் ஓரங்களில் பிறிதொரு மரப்பகுதியை இணைக்க உருவாக்கப்படுவது.

தரங்கு - உளியின் கூர்ப்பகுதி.

தவ்வு - துளை

திசைக்காவலா் அம்சம் - அட்டதிக்குப் பாலகா்

திமிரி - நீளம் குறைந்த நாதஸ்வரம்.

திரணை - தேரின் வரிவா்க்கங்கள் வளைந்த வடிவத்தில் அமைக்கப்படுதல்.

திரணைக் கூடு (யாழ்)

குழைவுக் கூடு (இந்தியா) - மரத்தை வளைவாக சீவுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு வகைக் கருவி.

திரண்ட உளி - (மேற்பக்கம் திரண்டிருப்பது.) வட்ட வடிவில் சித்தரிப்பு வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுவது.

திரிதளவிமானம் - தேரின் அலங்காரக் கூரையில் மூன்று அடுக்குகளாகக் கொடுங்கைகள் பூட்டப்படும் முறை.

திருஷ்டி கழித்தல் - வேலைத்தளத்திற்கு கெடுதல் ஏற்படாவண்ணம் நீத்துப் பூசனிக்காய் வெட்டி கண்ணூறு கழித்தல்.

திறப்பணம் - துளையிடப் பயன்படும் கருவி.

திறப்பண வில் - திறப்பணக் கருவியை இயக்கப் பயன்படுத்தப்படுவது. ஒரு தடியில் கயிற்றைக்கட்டி அக்கருவியை சுத்தி இரு பக்கமும் சுழலச் செய்தல். வில் போன்ற வடிவத்தில் இருக்கும்.

துண்டு விழுத்துதல் - சரியான நீளத்தில் தேவையற்ற மரப்பகுதியை அறுத்து விழுத்துதல்.

துவாரபாலகா் - வாயிற் காவலா் சிற்பம், தெய்வத் திருமேனி அமையப்பெறும் மேடைக்கு இருபுறமும் பொருத்தப்படும்.

துவாரபாலகி - பெண் தெய்வங்களுக்கான வாயிற் காவலா் சிற்பம்.

தூக்கரேந்தை - தேரின் கூட்டுப் பகுதியினை அழகுபடுத்த பல இடங்களில் கீழ்நோக்கி தூங்கும் வகையில் மரத்தினால் அமைக்கப்பெறும் அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய வடிவம்.

தூண் - தேரின் அடிப்பாகத்தில் விக்கிரகம், குதிரைக்கட்டை, யாளிக்கட்டைகளுக்கு இடையில் மற்றும் ஏனைய பாகங்களிலும் அமைக்கப்படும் மரத்தாலான அலங்கார தூண் அமைப்பு.

தேங்காய் தடுக்கி - சிம்மாசனத்தில் வைக்கப்படும் தேங்காய்கள் விழாதவாறு தடுத்து நிறுத்தும் ஒரு வகை ரேந்தை.

தேவாசனம் - தேரின் இறை விக்கிரகம் எழுந்தருளும் சிம்மாசனத்திற்கு கீழ் உள்ள பகுதி.

தோ்முட்டி (யாழ் வழக்கு), தோ்நிலை/திருத்தேரேற்றுக்கூடம் (இந்திய வழக்கு) - தேருக்குள் இறையுருவங்களை எடுத்துச் செல்வதற்கான படிகளுடன் கூடிய மண்டபம்.

## ந்

நட்டுக்கண் - இரண்டு மர அச்சுக்களை பார் மூலம் இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் அமைப்பு. இது அலங்கார வடிவுடையதாகக் காணப்படும்.

நட்டுக்கண் விக்கிரகம் - நட்டுக்கண்ணில் அமையப் பெறும் விக்கிரகங்கள்.

நராசனம் - தேரின் சிம்மாசனம் மற்றும் தேவாசனத்தினை அடுத்துள்ள கிடையான பகுதி. மானிடர்கள் இரதோற்சவத்தின் போது நிற்கக் கூடிய பகுதி.

நூல் அளவு - மிக நுண்ணிய அளவு.

நெட்டாங்கு - தேரின் ஒரு வரி

நெடும் பார் - பெரிய, நீளம் கூடிய பார்.

நென்பு - இரண்டு மர உருவங்களை ஒன்றுடன் ஒன்று இணைக்கப் பயன்படுத்தும் மரத்தாலான நீப்பை.

நென்புப் பொழி - நென்பை இறுக்குவதற்குப் பயன்படுத்தப்படும் பொழி.

## ப்

பக்கப்பார் - சில்லுப் பக்கம் அமையப்பெறும் ஒரு வகைப் பார்.

பதக்கம் அடித்தல் - ஆலய வாகனங்களின் நகைகள் அடித்தல்.

பந்தல் ஆணி - தேரின் அலங்காரக் கூரையினையும், தேரின் அடிப்பாகத்தினையும் இணைக்கப் பயன்படுத்தப்படும் இரும்பினாலான நீளமான ஆணி.

பட்டி - வாகனங்களின் உடல்களில் அமைக்கப்படும் அலங்கார நகை போன்ற அமைப்பு.

படல் - சப்பைரதத்தின் கோபுரம் போன்ற அமைப்பு.

படிச்சட்டம் - ஆலய வாகனங்கள் அமைக்கும் போது, வாகனங்களின் கால்கள் பொருத்தப்படும் அடித்தளம்.

படிச்சட்டக்கால் - வாகனத்தினையும், படிச்சட்டத்தினையும் தாங்கி நிற்கக் கூடிய நான்கு அலங்கார வடிவான கால்கள்.

படிமானம் - இரண்டு பலகைகள் ஒன்றுடன் ஒன்று சரியாகப் பொருந்துதல்.

பண்டிகை - கலசம் பொருத்தப்படும் பகுதி. தேரின் விமானப் பகுதியில் கலசத்திற்கு முதல் நேர்க் கீழ்ப் பகுதியில் அமையப்பெறுவது

பல்லுப்பேர்த்தல் - வாள் அல்லது றம்பை போன்றவற்றின் கூரிய பற்களை ஒன்றைவிட்டு ஒன்று எதிரெதிர்த் திசையில் சிறியளவில் வளைத்தல்.

பவளக்கால் - தேரின் அலங்கார விமானத்தையும் அடிப்பாகத்தையும் இணைக்கப் பயன்படுத்தப்படும் பவள வடிவில் அமையப்பெறும் கடைச்சல் கால். (மேல் விமானத்தினைத் தாங்கி வைத்திருக்கும் தூண் போன்ற அலங்கார வேலைப்பாடுடைய பகுதி.)

பவளக்கால் ரேந்தை - பவளக்காலின் ஓரங்களில் வருவது.

பார் - தேரின் இரு அச்சுகளையும் இணைக்கும் பகுதி.

பார்ப்போதிகை - பாரின் இரு அந்தங்களிலும் அமைக்கப்படும் பூப் போன்ற அலங்கார வேலைப்பாடு.

பாரி - நீளம் கூடிய நாதஸ்வரம்.

பிரம பாகம் - பிரமனின் பகுதி, பிரமனுடன் தொடர்புடைய புராணக் கதைகளுடன் கூடிய கதைகள் காட்சிகளாக விக்கிரகங்களில் அமையப் பெறுவது.

பிரிவுபார்த்தல் - ஒரே அளவு உயரத்தில் இருக்க வேண்டிய மரப்பகுதிகள் சமச்சீராக உள்ளதா என சரிபார்த்தல்.

பீடப்பலகை - வாகனங்களில் எழுந்தருளி விக்கிரகத்தினை வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் பலகையினாலான அமைப்பு.

பீலுளி (யாழ்)

குழைவு இழைப்புளி (இந்தியா) - (உட்பக்கம் திரண்டிருப்பது). வட்ட வடவில் சித்தரிப்பு வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுவது.

புறாவால்மூட்டு, (பசும்பை வேலை) - தேரின் மரப் பகுதிகளை இணைக்க உதவும் ஒரு வகைத் தொழில்நுட்பம்.

பூசாந்திரம் - 12 கோணங்களைக் கொண்டு வடிவமைக்கப்படும் அமைப்பு.

பூதப்பார் - அச்சின் மேலுள்ள பகுதிகளைப் பூதங்கள் தாங்குவது போன்ற அமைப்பு. நெடும் பாரின் இரு முனைகளிலும் பூத உருவங்களைப் பொருத்தி உருவாக்கப்படும் பார்.

பூவிழுத்தித் தீட்டுதல் - உளியைத் தீட்டும் போது உளியினை மட்டமாக்குகையில் உளியின் சிறு துண்டுகளை விழுத்தித் தீட்டுதல்.

பெரிய யாளி - தேரின் அமைப்பினை வெளிப்படுத்துவதற்கு அமைக்கப் பெறுவது. மேற்பகுதியினைத் தலையில் தூக்கி வைத்திருப்பது போல் இருக்கும்.

பெருக்கடித்தல் - வாகனங்களை உருவாக்கும் போது பெரும்படியான துண்டுகளாக நீக்குதல்.

பொழி - சதுரமாகவோ அல்லது நீள்சதுரமாகவோ மரத்தில் அமைக்கப்படுகின்ற துளை.

**ம்**

மகரயாளி - மகரத்தின் தும்பிக்கையில் யானையை தூக்கி இருக்குமாறு அமையப் பெறும் வடிவம். யானையிலும் பார்க்க மகரம் பலம் கூடியது என்பதை விளக்குவதாக அமையப்பெறும்.

மஞ்சள் உணா (மஞ்சமுன்னா) (யாழ்)

அயினிப் பலா (இந்தியா) - பலகை, சட்டம் போன்றன செய்யப் பயன்படும் மஞ்சள் நிற மரவகை.

மட்டவுளி - மட்டமாக சித்தரிக்கும் போதும், பொழி அடிப்பதற்கும், வீச்சடிப்பதற்கும் பயன்படுத்தப்படுவது.

மணிமண்டபம் - பவளக்காலின் மேற்பகுதி பந்தல், சொக்கட்டான் வேலை அமையப்பெறும் பகுதி.

மரஆணி - குறிப்பிட்ட சில மரங்களை உருளை ஆணி வடிவில் செதுக்குவது.

மால் - அமையப் பெறவேண்டிய மரச்சிற்ப உருவத்தினை கடதாசி மட்டையில் வரைந்து அதனை வெட்டி எடுத்தல்.

மூலை அரம் - வால் அல்லது றம்பத்தினைக் கூராக்குவதற்குப் பயன்படுத்தப்படுவது.

முகபத்திர அமைப்பு - தேர் அமையப் பெறும் கலை மரபு.

மூலமூர்த்திபாகம் - பிள்ளையார், மற்றும் குறித்த ஆலய மூலமூர்த்தி மூர்த்தங்கள் அமையப் பெறும் பாகம்.

மேல்விமானம் - மேற்பகுதி, கூடு.

மேல் விதானம் - விமானத்தின் மேற்பரப்பு, அலங்கார வா்ண வேலைப்பாடுகள் அமையப் பெற்ற பகுதி.

**ய்**

யாளிக்கட்டை - சிங்கத்தின் உடம்பும் மகரத்தின் தலையும் சோ்ந்த கற்பனை வடிவம்.

**ர்**

ரேந்தை - தேரின் மேற்பகுதி ஓரங்களில் பலகையில் அமையப்பெறும் அலங்காரத் தூக்கம்.

**வ்**

வரைகம்பு (யாழ் வழக்கு),

வறுவுகட்டை (இந்திய வழக்கு) - மரத்தில் கோடு கீறப் பயன்படும் ஒருவகைக் கருவி.

வாக மாலை (யாழ் வழக்கு)

தொம்பை (இந்திய வழக்கு) - தேரின் விமானப்பகுதியில் யாளியில் இருந்து அடித்தளத்தினை நோக்கித் தொங்கவிடப்படும் அலங்காரத் துணி வகை.

வாங்கல் தவ்வு - ஒரு மர அமைப்பை இண்னொரு மர அமைப்புடன் இணைக்கும் பொழுது அதிகளவான படிமானத்திற்காகப் போடப்படும் துளை.

விக்கிரக வரி - விகக்கிரகங்கள் அமையப் பெறும் பகுதி. (விக்கிரக வரி 4 பாகம்)

விமானம் - தேரின் மேற்பகுதி

வியாழ வரி - அடித்தளத்தின் மேற்பகுதி. பவளக்கால் பொருத்தும் இடம், எண்கோண வடிவிலும் வரும், பூசாந்தர முறையிலும் வரும், பிள்ளையார் தேர் எனில் வட்ட வடிவிலும் வரும்.

விஷ்ணு பாகம் - பின்பகுதியில் விஷ்ணுவின் திருவிளையாடற் காட்சிகளின் சிற்பம்

வீச்சடித்தல் - ஒரு மர அமைப்பை உருவாக்கும் போது தேவையான உருவத்திற்கேற்ப எதிரெதிர்ப் பக்கங்கள் சமச்சீராக வரும் வகையில் செதுக்குதல்.

வெளித்தல் - இணைக்கப்பட்ட இரண்டு மரத்துண்டங்களுக்கு இடையில் இடைவெளி வருதல்.

தேரின் அமைப்பும் அதன் உறுப்புகளும் பற்றி இந்துத் தத்துவவியலுடன் தொடர்புடைய விளக்கங்களும் வழங்கப்படுவதுண்டு. சான்றாக 1984 இல் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி கந்தசுவாமி கோவில் சித்திரப் பெருந்தேர் வெள்ளோட்ட தினத்தன்று வெளியிடப்பட்ட தேரின் மகிமை பற்றிய கட்டுரைகளின் தொகுப்பில் பயன்படுத்தப்பட்ட தேரின் உறுப்புக்களைக் குறிக்கும் பெயர்கள் பல இன்று பயன்பாட்டிலுள்ள பெயர்களிலிருந்து வேறுபட்டிருப்பதை அறிய முடிகின்றது. சான்றாகப் பின்வரும் கலைச்சொற்களைக் காண்க: சந்தி (ஆறு பருவங்கள்); மேல் விரிவு; கலங்கள்; முளைகள்; படிகள்; சாமர மிரட்டுவோர்; திருவடி; உச்சிக்குடை; முற்றுறைகள் (கண்கள்); பிற்றுறைகள் (சிகைகள்); பாகத்துறைகள் (இருசெவி); வலப்பாக சூரிய சந்திர கலாவாசிகள் (வலப்பக்கத்திலுள்ள இரு குதிரை வடிவங்கள்); இடப்பாக சூரிய சந்திர கலாவாசிகள் (இடப்பக்கத்திலுள்ள இரு குதிரை வடிவங்கள்); சோடசாந்தத்தானம் (கலசம்); துவாதசாந்தத்தானம் (முதலாம் அடுக்கு); மஸ்தக ஆதித்தானம் (இரண்டாம் அடுக்கு); மஸ்தக மத்தியத்தானம் (மூன்றாம் அடுக்கு); மஸ்தகாந்த ஸ்தானம் (நான்காம் அடுக்கு); லலாடமத்தி (ஐந்தாம் அடுக்கு); புருவுமத்தி (ஆறாம் அடுக்கு); தசேந்திரியம்; நாபித்தானம்.

திருவாரூர் தியாகராஜசுவாமி கோவில் ஆழித்தேரோட்ட விழாவின் போது 1989 இல் வெளியிடப்பட்ட “ஆரூர் ஆழித்தேர்” எனும் நூலில் பயன்படுத்தப்பட்ட தேர்ப் பாகங்களின் பெயர்களும் தற்கால வழக்கிலிருந்து வேறுபட்டிருப்பதனை அறிய முடிகன்றது. சான்றாகப் பின்வரும் கலைச்சொற்களைக் காண்க: தேரை இயக்க உபயோகிக்கும் முக்கிய மூலப்பொருட்களான முக்கோண வடிவமுடைய முட்டுக்கட்டைகள் (தேர் வலப்புறம் திரும்புவதற்காக வலப்புறக்கால்களில் முட்டுக்கட்டைகள் போடப்படும்). நெம்புகோல் அடிப்படையில் தேர்க்கால்களை நெம்பக்கூடிய உலுக்கு மரங்கள் (தேர் வலப்புறம் திரும்புவதற்காக இடப்புறப் பின்கால்களில் உலுக்கு மரம் போடப்படும்), தேர் எளிதில் திரும்பக்கூடிய சாரடிக்கட்டைகள், தேரின் தளத்திலுள்ள மையபீடை, தேர்யாளம், பக்கத்தட்டிகள், சட்டக்கோர்வை, கானட், தொம்பை, மேல்கிராதி, கீழ்கிராதி, பூக்குடம்,

கமாய்கால், பரப்புக்கட்டைகள், அம்பாரத்தோணி, சுருட்டி, வாசல்மாலைகள், பனஞ்சப்பைகள் (தேர்க் கட்டுமானத்திற்கான கால்கள்).

1980 இல் வெளியிடப்பட்ட மயிலை முருகன் ஆலயச் சித்திரத்தேர் வெள்ளோட்டச் சிறப்பு மலரில் இடம்பெற்ற உபபீடம், அதிஸ்டானம், பேருர்மட்டம், பார்விதானம், கன்னிலப்பார் - (முதல் வரிசை விக்கிரகங்களின் அமைப்புக்கு ஆதாரமாக அமைந்திருப்பது), விஸ்தாரம்பார்- (இரதத்தின் விஸ்தீரணத்தைக் குறிப்பது), கர்ணகுடம் (கர்ணகூடு) ஆகிய கலைச்சொற்கள் மருவி அவை வேறு பெயர்களால் அழைக்கப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

மயூரகிரிசர்மா, தி., (2010) அவர்களது "தேர்கள் நமது பண்பாட்டுப் பெருமிதத்தின் சின்னங்கள்" எனும் தலைப்பில் ஈழத் தேர்க்கலை அம்சங்களையும் உள்வாங்கி எழுதப்பட்ட கட்டுரையில் தேர்ப்பாகங்களின் பெயர்கள் சில குறிப்பிடப்பட்டுள்ளன. இவை யாழ்ப்பாண விஸ்வகுல சமூகப் பேச்சு வழக்கிலிருந்து வேறுபட்டு விளங்குகின்றது. சான்றாக: அதிஷ்டானம், உபபீடம், பேரூர் மட்டம், உபசித்தூர் மட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இலக்கண, இலக்கியங்களில் தேரின் அச்சிலிருந்து பீடம் வரையான பாகங்களைக் குறிக்கும் பெயர்களாக: ஆரக்கால் உருள் - சில்லு; கிடுகு - தேர்த்தட்டைச் சுற்றி அமைக்கப்படும் மரச்சட்டகம்; கூவிரம் - பீடப்பகுதியிலுள்ள தாமரை மொட்டு வடிவிலுள்ள அமைப்பு; கொடிஞ்சி - தேரின் நுகக்காலையும் சிகரத்தையும் இணைக்கும் பகுதி; கொடுங்கை - தேரின் வெளிப்பாகத்து நீண்ட மேல் வளைவு; தேர்ச்சீலை- தேரை அலங்கரிக்கப் பயன்படுத்தும் சேலை; தேர்த்தட்டு அல்லது தேர்த்தளம், நாப்பண் - தேரின் நடுவிடம்; பாகர் - தேரின் மேற்தட்டைச் சுற்றியுள்ள மரக்கைபிடிச்சுவர்; பார் - தேரின் நடுவிலுள்ள பீடம்; பிரம்பு - தேர்முட்டி. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கொடுங்கை, பார், தேர்ச்சீலை போன்ற சொற்களின் உபயோகம் யாழ் வழக்கிலிருப்பதை அறிய முடிகின்றது.

அம்பிகைபாகன், வே., அவர்களது "கலாகேசரி ஆ. தம்பித்துரை" (2000) எனும் நூலில் இடம்பெற்ற தேர்ப் பாகங்கள் பலவற்றின் பெயர்கள் ஆய்வுத் தரவாளர்களின் சிற்பமொழியுடன் ஒத்துள்ள அதேவேளை சில சொற்கள் வேறுபட்டும் உள்ளன. வேறுபட்ட சொற்களுக்குச் சான்றாக: சித்தூர் மட்டம் (முதலாம் தளம்), பேருர் மட்டம் (அரண்டாம் தளம்), ஆதார சக்தி அமைப்புமுறை, உபபீடம், அதிஷ்டானம், பிரதமகோணம், இருதளசிற்பம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பின்வரும் சொற்களில் ஒற்றுமைத் தன்மையினை அவதானிக்க முடிந்தது. கபோதகம்: விமானம்; யாளி; யாளித்தூண்; பூஷாந்திரம்; எழுதகம்; விமானம்; நராசனம்; உத்திரமட்டம்;

முகபத்திரமடக்கைமீட்பு; துவாரபாலகர்; மணிமண்டபம்; மேல்விதானம்; பவளக்கால்கள்; பிரதம வாசல்கள்; முகபத்திர அமைப்பு; இரட்டைப் பஞ்சாங்க அணியமைப்பு; திராவிட முகபத்திர அமைப்பு; சிற்பங்கள் : அன்னம், யாளி, சிங்கம், குதிரைகள்; சில்லு; விக்கிரகங்கள்; திரிதளவிமானம்.

**முடிவுகளும் பரிந்துரைகளும்**

இந்த ஆய்வின் மூலம் யாழ்ப்பாணத்திலும் பிரதேசத்திற்குப் பிரதேசம் தேர்ப்பாகங்களைக் குறிக்கும் பெயர்களில் வேறுபாடு காணப்படுவதனையும், சிற்பக் கலைச்சொற்கள் குறிப்பிட்ட பயன்பாட்டெல்லையினைக் கொண்டிருப்பதனையும் தெளிவுபடுத்த முடிகின்றது. கண்திறத்தல் இதன் மரபுத்தொடர்ப் பொருள் அறிவு உண்டாதல் என்பதாகும். ஆனால் விஸ்வகர்மர்களின் பேச்சில் இதன் பொருள் படைப்பாக்கத்திற்கு சக்தி வழங்குவதாக அமைகிறது. இவ்வாறு பவளக்கால், பல்லுப் போர்த்தல், பார், விமானம், உழவு, பண்டிகை, பந்தல் ஆணி, நட்டுக்கண், தூண் போன்ற பல சொற்கள் சூழ்நிலைக்கேற்ப பொருள் கொள்வதை அவதானிக்க முடிந்தது. அத்துடன் துளை அல்லது துவாரத்தினைக் குறிக்கப் பயன்படும் “தவ்வு”; சரிவினைப் குறிக்கப் பயன்படும் “சத்தார்”; படைப்பாக்கத்திற்கு தேவையான உருவத்தினை வரைந்து வெட்டி எடுத்தலைக் குறிக்கும் “மால்”: மற்றும் வரைத்தல்; வாங்கல் தவ்வு; பெருக்கடித்தல் போன்ற யாழ்ப்பாண விஸ்வகுல சமூக சிற்பாசாரியார்களின் சிற்பமொழி, குறித்த பயன்பாட்டெல்லையுடன் பயன்படுத்தப்பட்டு வருவதனை இவ்வாய்வின் மூலம் வெளிக்கொணரமுடிந்தமை சிறப்பிற்குரியதே. மேலும் தமிழகச் சிற்பமொழியும் யாழ்ப்பாணப் பிரதேச சிற்பமொழியும் பல்வேறு இடங்களில் வேறுபடுவதனையும் எடுத்துக்காட்ட முடிந்தது. அறிவியலின் உச்ச வளர்ச்சியின் காரணமாக அறிவியல் தொழில்நுட்பத்தின் தாக்கத்தினை தச்சுத் தொழிலிலும் அவதானிக்க முடிகின்றது. மரபு வழிப்பட்ட தொழில்கள் பல முற்றிலும் இயந்திரமயமாக்கப்பட்ட நிலையிலும் கூட மரச்சிற்ப உருவாக்கப்பணிகளில் முற்றிலும் அறிவியல் தொழில்நுட்பம் ஊடுருவவில்லை என்றே மொழிய வேண்டும். மரம் அறுத்தல், கடைசல், இழைப்பு போன்ற பணிகளுக்கு மட்டுமே இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக களஆய்வில் தகவலாளர்களிடம் பெற்ற தரவுகளின் அடிப்படையில் ஸ்தபதிகள் உச்சரிக்கும் சொற்களின் மூலச் சொல் வடிவம் பற்றி ஆராயப்படவில்லை. சிற்ப உருவாக்கங்களில் இயந்திரங்களின் பயன்பாட்டினை முற்றிலும் விரும்பாத தகவலாளி ஆச்சாரியார் கலாபூஷணம் சின்னத்தம்பி கணேசலிங்கம் அவர்களின் பேச்சில் ஆங்கில மொழிக்கலப்பின்றிய சிற்பமொழியினை தரவாகப் பெற முடிந்தது. பழைமை போற்றும் பண்பு தொழிலில் மட்டுமல்ல அவர்தம் மொழியிலும் பேணப்படுவதனை அவதானிக்க முடிந்தது. இவரைப் போன்ற ஈழத்தில் சிற்பக்கலை மரபுரிமையினை பழைமை மாறாது பேணும் பல சிற்பாசாரியார்களைத் தகவலாளர்களாகக் கொண்டு அவர்தம் சிற்பமொழியினைத் தொகுத்து யாழ்ப்பாணத் தமிழ் சிற்பத்தொழில்

கலைச்சொல் அகராதி ஒன்று உருவாக்கப்படுவதன் மூலம் யாழ்ப்பாணத்தில் வழக்கிழந்துவரும் மரச்சிற்பக் கலைச்சொற்களை ஆவணப்படுத்த முடிவதுடன் யாழ்ப்பாணத் தமிழின் வளத்தினை உலகறியச் செய்யமுடியும். அந்தவகையில் யாழ்ப்பாண சமூகத்தில் சிற்பக்கலை மரபினை அதன் தன்மை குன்றாது சிற்பக்கலையிலும், சிற்பமொழியிலும் பழமை போற்றிவரும் விஸ்வகுல மரச்சிற்பாசாரியார் சமூகத்தவர் யாழ்ப்பணத் தமிழ்ச் சமூகத்தின் பொக்கிசங்கள் என்றே நிச்சயம் மொழியவேண்டும். அவர்களது கலைப்படைப்புக்கள் தேசிய, சர்வதேச ரீதியில் போற்றப்படுவதனைப் போன்று அவர்களது மொழியும் போற்றப்பட வேண்டும் காரணம் அவை இந்துப் பண்பாட்டியலுடன் அதிகம் தொடர்புற்றுள்ளமையே.

## உசாத்துணை


அம்பிகைபாகன், வே., (2000), கலாகேசரி ஆ. தம்பித்துரை, காங்கேயன் கலைக்கூடம், யாழ்ப்பாணம்.

சித்திரபுத்திரன், எச்., திருநாவுக்கரசு, இரா., பார்வதியம்மாள், மா., (2002), தொழில் கலைச்சொல் அகராதி (உழவு, தச்சு, கொல்லு, பட்டு நெசவுத் தொழில்கள்), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சீனிவாசவர்மா, கோ., (1977), கிளைமொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், இந்தியா.

சுபதினி, ர., (2005), ஈழத்துத் தமிழ்ச் சிறப்புச் சொற்கள், மொழியியல் ஆங்கிலத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பாலசுப்பிரமணியன், எம்.ஏ., (1989), ஆரூர் ஆழித்தேர், திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில் வெளியீடு, இந்தியா.

புஷ்பரட்ணம், பு., (2012), யாழ்ப்பாண வாழ்வியல், எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன் பிரைவட்) லிமிட்டெட், இலங்கை.

மயூரகிரிசர்மா, தி., (2010), தேர்கள் நமது பண்பாட்டுப் பெருமிதத்தின் சின்னங்கள், தமிழ் ஹிந்து தமிழரின் தாய்மதம்.

தேர், (1984), யாழ் குளோபல் கொம்யூனிகேசன்ஸ், யாழ்ப்பாணம்.

வைத்தியலிங்கன், செ., (2003), சிற்பக்கலை, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.